# இலங்கைச் சனநாயக சோசலிச்க் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2001 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க,
## கடற்கொள்ளைச் சட்டம்

---

*(2001, ஓகத்து மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


2001, ஓகத்து மாதம் 10 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II** ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 15.50** **தபாற் செலவு: ரூபா 5.25**

**2001 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க,**
**கடற்கொள்ளைச் சட்டம்**

[2001 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.— ஓ. 11/97
4431

**இலங்கையில் கடற்கொள்ளையை ஒடுக்குவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புள்ள அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம் 2001 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க கடற்கொள்ளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

### நிருவாகம்

இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை கடற்கொள்ளையை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.

**2.** (1) இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை, வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளரின் கலந்தாலோசனையுடன், இலங்கையில் கடற்கொள்ளையை ஒடுக்குவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் ஒன்றிணைப்பதற்கும், மற்றும் அத்தகைய நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதைக் கண்காணிப்பதற்கும் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

(2) இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் கடற்கொள்ளை தொடர்பான தகவல்களைச் சேர்த்தல், ஒப்புநோக்கல் மற்றும் பரப்புதல், அத்துடன், கடற்கொள்ளையை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கான தேவைப்படக்கூடியவாறான அத்தகைய உதவிகளை ஏற்பாடு செய்தல் என்பன இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

## பாகம் II

### தவறுகள்

கடற்கொள்ளை.

**3.** திருட்டு, பலாத்காரம், அச்சுறுத்தல், ஏமாற்று, மோசடிமூலம் அல்லது அவற்றையொத்த வேறு வழிகள்மூலம் ஏதேனும் கப்பலை நேர்மையீனமாக எடுக்கின்ற அல்லது தமதாக்கிக்கொள்கின்ற எவரேனும் ஆள், கடற்கொள்ளைத் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இச்சட்டத்தின் 8,9, மற்றும் 10 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, ஐந்து ஆண்டுகளுக்குக்

2 - H - 011602 - 1150 (2001/03)

குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலப்பகுதிக்கான, இருவகையில் ஒருவகையான மறியற் றண்டனையுடன் தண்டிக்கப்படலும் வேண்டும், அத்துடன், பத்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு கோடி ரூபாவை விஞ்சாததுமான தொகை அல்லது எந்தக் கப்பல் தொடர்பில் தவறுபுரியப்படுகிறதோ அந்தக் கப்பலின் பெறுமதிக்குச் சமமான ஒரு தொகை என்பவற்றில் எது கூடுதலானதோ அக்குற்றப்பணமொன்றிற்காளாதல் வேண்டும்.

*கப்பலிலிருந்து ஆதனத்தை எடுத்தல்.*

**4.** திருட்டு, பலாத்காரம், அச்சுறுத்தல், ஏமாற்று, மற்றும் மோசடிமூலம், அல்லது அவற்றையொத்த வேறு வழிகள்மூலம் ஏதாவது கப்பலொன்றில் இருந்து ஏதேனும் ஆதனத்தை நேர்மையீனமாக எடுக்கும் அல்லது துமதாக்கிக்கொள்ளும் எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இச்சட்டத்தின் 8, 9 மற்றும் 10 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, மூன்று ஆண்டுகளுக்குக் குறையாததும் ஏழு ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலப்பகுதிக்கான, இருவகையில் ஒருவகையிலான மறியற்றண்டனைக்கும் மற்றும் பத்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பது இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான தொகை அல்லது எவ்வாதனம் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அவ்வாதனத்தின் பெறுமதிக்குச் சமமான தொகை ஆகிய இவற்றுள் எது கூடுதலானதோ அக்குற்றப்பணமொன்றிற்குமாளாதலும் வேண்டும்.

*சட்டமுறையான அதிகாரம் இன்றி கப்பலொன்றில் ஏறியிருத்தல்.*

**5.** கப்பலொன்றின் தலைவனுடைய, முதல்வருடைய அல்லது கப்பலுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளின் உரிய அனுமதியின்றி அல்லது சட்டமுறையான அதிகாரமின்றி ஏதேனும் கப்பல் கடலில் இருக்கையில் அல்லது துறைமுகமொன்றில் அல்லது துறையொன்றில் அல்லது கடல்முகத்தில் நங்கூரமிட்டிருக்கையில் அதனுள் பிரவேசிக்கும் அல்லது ஏறியிருக்கும் எவரேனும் ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இச்சட்டத்தின் 8, 9 மற்றும் 10 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலப் பகுதிக்கான மறியற்றண்டனைக்கும் குற்றப்பணமொன்றிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*கொள்ளையிடப்பட்ட கப்பல் மற்றும் ஆதனத்தை வைத்துக்கொள்ளல், உடைமையாக்குதல் மற்றும் கொண்டு செல்லல்.*

6. இச்சட்டத்தின் 3 ஆம் அல்லது 4 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதன்மூலம், நேர்மையற்றமுறையில், ஏதேனும் கப்பலை அல்லது ஆதனத்தை ஆதிக்கத்துட்படுத்துகின்ற, பெறுகின்ற, வைத்துக்கொள்கின்ற அல்லது கொண்டு செல்கின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இச்சட்டத்தின் 8, 9 மற்றும் 10 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, மூன்றாண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கும், பத்து இலட்சம் ரூபா அல்லது எவ்வாதனம் தொடர்பில் தவறுபுரியப்படுகின்றதோ, அவ்வாதனத்தின் பெறுமதி என்பவற்றில் எது கூடியதோ அதனை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*எத்தனங்கள்.*

7. (1) இச்சட்டத்தின் 3 ஆம் அல்லது 4 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிய எத்தனிக்கின்ற அல்லது உதவுகின்ற அல்லது ஒத்தாசைபுரிகின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இச்சட்டத்தின் 8, 9 மற்றும் 10 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, ஐந்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இரு வகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் இருபது இலட்சம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 5 ஆம் அல்லது 6 ஆம் பிரிவுகளின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழான தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இச்சட்டத்தின் 8, 9 மற்றும் 10 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கும் குற்றப்பணமொன்றிற்குமாளாதலும் வேண்டும்.

*தவறொன்றைப் புரிகையில் பலாத்காரத்தைப் பயன்படுத்தல் அல்லது அச்சுறுத்தல்.*

8. இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு அல்லது 4 ஆம் பிரிவு அல்லது 5 ஆம் பிரிவு அல்லது 6 ஆம் பிரிவின் கீழான தவறொன்றுக்கான எவரேனும் ஆளின் விளக்கத்தில் அத்தகைய தவறைப் புரிகையில் அத்தகைய ஆள் பலாத்காரத்தை அல்லது அச்சுறுத்தலைப் பயன்படுத்தினார் என எண்பிக்கப்படுமிடத்து, அவருக்கு பன்னிரண்டாண்டுகள் நீடிக்கக்கூடிய காலப்பகுதியொன்றுக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப்படலாம்.

தவறொன்றை புரிகையில் ஆயுதத்தைப் பயன்படுத்தல்.

**9.** இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு அல்லது 4 ஆம் பிரிவு அல்லது 5 ஆம் பிரிவு அல்லது 6 ஆம் பிரிவின்கீழான தவறொன்றுக்கான எவரேனும் ஆளின் விளக்கத்தில், அத்தகைய ஆள், அத்தகைய தவறைப்புரிகையில், இறப்பளிதகு ஆயுதத்தைக் கொண்டிருந்தார் என எண்பிக்கப்படுமிடத்து, அவருக்கு பதினைந்து ஆண்டுகள் நீடிக்கக்கூடிய காலப்பகுதி ஒன்றுக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப்படலாம்.

தவறொன்றைப் புரிகையில் காயம் ஏற்படுத்தல்.

**10.** இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு அல்லது 4 ஆம் பிரிவு அல்லது 5 ஆம் பிரிவு அல்லது 6 ஆம் பிரிவின்கீழான தவறொன்றுக்கான எவரேனும் ஆளின் விளக்கத்தில், அத்தகைய ஆள், அத்தகைய தவறினைப் புரிகையில் வேறு எவரேனும் ஆளுக்குத் தன்னிச்சையாகக் காயம் விளைவித்தார் என எண்பிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆளுக்கும், அத்தகைய குற்றத்தைப் புரிகையில் அவருடன் இணைந்து தொடர்புபட்ட வேறு எவரேனும் ஆளுக்கும் இருபது ஆண்டுகளுக்கு நீடிக்கக் கூடிய காலப்பகுதி ஒன்றுக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப் படலாம்.

இழப்பிக்கப்படுதல்.

**11.** (1) இச்சட்டத்தின் 3 ஆம், 4 ஆம் அல்லது 5 ஆம் பிரிவுகளின்கீழான தவறொன்றிற்காக எவரேனும் ஆளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அத்தகைய தவறைப்புரிகையில் அல்லது புரிதல் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்ட கப்பல், மோட்டார் வாகனம் அல்லது ஏற்றிச்செல் வழிமுறை அல்லது ஆதனம் எதுவும், அத்தகைய கப்பலின், மோட்டார் வாகனத்தின் அல்லது ஏற்றிச்செல் வழிமுறையின் அல்லது ஆதனத்தின் சொந்தக்காரர் அல்லது அதன் உடைமைக்குச் சட்டமுறையாக உரித்துடைய ஆள், அத்தகைய கப்பல், மோட்டார் வாகனம் அல்லது ஏற்றிச்செல் வழிமுறை அல்லது ஆதனமானது, அத்தகைய தவறைப் புரிகையில் அல்லது புரிதல் தொடர்பாக அவருக்குத் தெரியாமல் அல்லது அவரது அனுசரணையின்றிப் பயன்படுத்தப்பட்டது என நீதிமன்றம் திருப்திப்படும்வகையில் நிரூபித்தால் ஒழிய, அரசுக்கு இழப்பிக்கப்படவேண்டுமென நீதிமன்றமானது கட்டளை ஆக்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட கட்டளை ஒன்றின் மூலம் இழப்பிக்கப்பட்ட கப்பல், மோட்டார் வாகனம் அல்லது ஏற்றிச் செல்வழிமுறை அல்லது ஆதனம் எதுவும் அரசுக்கு முழுமையாக உரித்தாவதாதல் வேண்டும். அத்தகைய உரித்தாதலாவது —

(அ) அதற்கென அனுமதிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு எதுவும் செய்யப்படாத விடத்து, இழப்பித்தற் கட்டளைக்கெதிராக, விடயத்துக்கேற்ப மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று செய்யப்படக்கூடிய காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் ; அல்லது

(ஆ) இழப்பித்தற் கட்டளைக்கு எதிராக, விடயத்திற்கேற்ப மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருக்குமிடத்து, இழப்பித்தற் கட்டளையை வலியுறுத்தும் அல்லது ஏற்றுக்கொள்ளும் இறுதித் தீர்மானத்தின்மீது,

பயனுறுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றின்மூலம் ஏதேனும் கப்பல், மோட்டார் வாகனம் அல்லது ஏற்றிச்செல் வழிமுறை அல்லது ஆதனம் அரசுக்கு உரித்தாக்கப்படுமிடத்து, நீதிமன்றம், அத்தகைய கப்பல், மோட்டார் வாகனம் அல்லது ஏற்றிச்செல் வழிமுறையை அல்லது ஆதனத்தைப் பகிரங்க ஏலவிற்பனைமூலம் விற்கப்படச் செய்தல் வேண்டும் என்பதுடன், விற்பனை வரும்படிகளை இலங்கைத் துறைமுக அதிகாரசபைக்கு வைப்புச் செய்யப்படச் செய்தலும் வேண்டும்.

## பாகம் III

### தவறுகளைப் புலனாய்வு செய்தல்

**12.** (1) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழான ஒவ்வொரு தவறும், இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள், பிடியாணையின்றிக் கைது செய்யப்படற்பாலதும் பிணையில் விடப்படற்பால தற்றதுமாதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான தவறுகள் பிடியாணையின்றிக் கைது செய்யப்படற்பாலதும் பிணை யற்றதும் ஆதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 3 ஆம், 4 ஆம், 5 ஆம், 6 ஆம் அல்லது 7 ஆம் பிரிவுகளின் கீழான தவறொன்றைப் புரிவதில் தொடர்புடையவர் அல்லது புரிந்துள்ளார் எனச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் ஓராள், விதிவிலக்கான சந்தர்ப்பம் உள்ளதாகக் காட்டப்படுவதன்மீது ஒரு மேல்நீதிமன்ற நீதிபதியினால் தவிர பிணையில் விட்டுவிடப்படலாகாது.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் சமாதான அலுவலராகக் கருதப்படுதல்.

**13.** (1) பொலிசு அலுவலர், இலங்கைச் சுங்க அலுவலர் அல்லது ஆயுதப்படைகளின் அலுவலர் அல்லது அமைச்சரால், எழுத்தில், விசேடமாகப் பதவி குறிப்பிடப்பட்ட, நிபுணத்துவ அறிவுகொண்ட இலங்கை துறைமுக அதிகாரசபையின் அலுவலர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஓர் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலராதல் வேண்டும்.

(2) ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரும், 1979ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினால் ஒரு சமாதான அலுவலருக்கு அல்லது ஒரு விசாரணையாளருக்கு பிடியாணையின்றிக் கைதுசெய்யப்படற்பாலதான தவறுகள் தொடர்பில் அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட எவையேனும் தத்துவங்களையும் கடமைகளையும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பிரயோகிப்பதற்காக அச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஒரு சமாதான அலுவலராகவும் விசாரணையாளராகவும் கருதப்படுதல் வேண்டும்.

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை ஏற்புடைத்தாதல்.

**14.** இச்சட்டத்தால் வேறுவகையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, இச்சட்டத்தின்கீழான எல்லாத் தவறுகளும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க புலனாய்வுசெய்யப்பட்டு விளங்கப்படுதல் அல்லது வேறுவகையில் கையாளப்படுதல் வேண்டும்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் தத்துவங்கள்.

**15.** (1) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் கடற்கொள்ளைத் தவறொன்று புரியப்பட்டுள்ளதாக, புரிபட்டுக் கொண்டிருப்பதாக அல்லது புரிபடப்போவதாகச் சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்குமிடத்து, இலங்கைத் துறைமுக அதிகாரசபையினதும் கப்பற்றொழில் பணிப்பாளரினதும் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி

யினால் விதிக்கப்படும் அத்தகைய நடவடிக்கைமுறைக்குக் கடும் இசைவாக, அவர், அத்தவறைப் புரிவதில் அல்லது புரிவது தொடர்பில் விடயத்திற்கேற்ப, பயன்படுத்தியிருந்ததாக அல்லது ஈடுபட்டிருந்ததாக அல்லது பயன்படுத்தவுள்ளதாக அல்லது ஈடுபடவுள்ளதாக நியாயமாகச் சந்தேகிக்கப்படுகின்ற –

(அ) ஏதேனும் கப்பல், மோட்டார் வாகனம் அல்லது வேறு ஏற்றிச்செல் வழிமுறையை நிறுத்தி ஏறலாம் ;

(ஆ) ஏதேனும் வளவினுள் பிரவேசிக்கலாம் ;

(இ) அத்தகைய ஏதேனும் கப்பல், மோட்டார் வாகனம், ஏற்றிச்செல் வழிமுறையில் அல்லது வளவுகளில் காணப்படும் எவரேனும் ஆளை அல்லது ஏதேனும் ஆதனத்தைத் தேடுகையிடலாம் ;

(ஈ) ஏதேனும் கப்பல், மோட்டார் வாகனம், ஏற்றிச்செல் வழிமுறை அல்லது ஆதனத்தைக் கைப்பற்றலாம் :

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலர் தமது தத்துவத்தைப் பிரயோகிக்கையில், கடற்கொள்ளைச் செயலொன்றால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்படும் சாத்தியமுள்ள ஏதேனும் கப்பலில் அதன் முதல்வரின் அல்லது அக்கப்பலின் பொறுப்பைக் கொண்டுள்ள வேறெவரேனும் அலுவலரின் அனுமதியின்றி ஏறுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவினால் தமக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில், ஏதேனும் கப்பல், மோட்டார் வாகனம், ஏற்றிச்செல் வழிமுறை அல்லது ஆதனத்தைக் கைப்பற்றுகையை வலுவுறுத்துகையில், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் நியாயமாக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பலாத்காரத்தைப் பயன்படுத்தலாம்.

(3) (அ) ஓராம் உட்பிரிவினால் தமக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் ஏதேனும் கப்பல், மோட்டார் வாகனம், ஏற்றிச்செல் வழிமுறை அல்லது ஆதனம் கைப்பற்றப்படுமிடத்து, அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அத்தகைய கப்பல், மோட்டார் வாகனம், ஏற்றிச்செல் வழிமுறை அல்லது ஆதனத்தை, நடைமுறைச் சாத்தியமான

விரைவில் அரசியலமைப்பின் 154ரு ஆம் உறுப்புரையால் தாபிக்கப்பட்ட மேல் மாகாணத்துக்கான மேல்நீதிமன்ற நீதிபதியின் முன் சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அவரின் சோதனைக்கெனப் பெறக்கூடியதாக்குதல் வேண்டும்.

(ஆ) எந்த நீதிபதியின் முன்னராக (அ) என்னும் பந்தியின்கீழ் ஏதேனும் கப்பல், மோட்டார் வாகனம் ஏற்றிச்செல் வழிமுறை அல்லது ஆதனம் சமர்ப்பிக்கப்படுகின்றதோ, அந்த நீதிபதி யானவர், அவர் தேவையெனக் கருதும் அத்தகைய விசாரணை யின் பின் அத்தகைய கப்பல், மோட்டார் வாகனம், ஏற்றிச்செல் வழிமுறை அல்லது ஆதனம் இச்சட்டத்தின் 3 ஆம் அல்லது 4 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதில் அல்லது புரிதல் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது எனத் திருப்திப் படுமிடத்து, அத்தகைய கப்பல், மோட்டார் வாகனம் அல்லது ஆதனம் அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளை ஆக்கலாம்.

(இ) பதினோராம் பிரிவின் (2) ஆம் (3) ஆம் உட்பிரிவு களின் ஏற்பாடுகள் அத்தகைய இழப்பித்தற் கட்டளைக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IV

### தவறுகள்மீதான விளக்கம்

இச்சட்டத்தின்கீழ் தவறுகளை விளக்குவதற்கான மேல்நீதி மன்றத்தின் நியாயாதிக்கம்.

**16.** வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப் பினும், அரசியலமைப்பின் 154ரு எனும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல் மாகாணத்திற்கான மேல்நீதிமன்றமானது இச்சட்டத்தின் 3 ஆம், 4 ஆம், 5 ஆம், 6 ஆம் அல்லது 7 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு இலங்கையின் ஆள்புலநீர்ப் பரப்பில் அல்லது இலங்கையரொருவரினால் இலங்கையின் ஆள்புலநீர்ப்பரப்பிற்கு வெளியே அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கப்பலொன்று தொடர்பாகப் புரியப்பட்டுள்ள விடத்து, அத்தகைய தவறினைக் கேட்டு தீர்மானிப்பதற்கு நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

குற்றம் பகர்தலுக்கு சட்டத்துறைத் தலைமை அதிபதிக்குள்ள தத்துவம்.

**17.** (1) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பினும், இச்சட்டத்தின் 3 ஆம், 4 ஆம், 5 ஆம், 6 ஆம் அல்லது 7 ஆம் பிரிவின் ஏதேனும் ஏற்பாடுகளுக்கு முரண்பட்டமை காரணமாக இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக ஆளொருவருக்கெதிராக, அச்சட்டத்தின் XV ஆம் அத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நீதிவான் நீதிமன்றமொன்றினால் மேற்கொள்ளப்படும் ஆரம்ப விசாரணையொன்று இல்லாது, சட்டத்துறைத் தலைமையதிபதி குற்றம் பகருதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதி மேல் நீதிமன்றத்தின் முன்னராக ஆளொருவருக்கெதிராக குற்றம் பகரும் ஏதேனும் விடயத்தில், பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(அ) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் 162 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள வகையில் தயாரிக்கப்பட்ட ஒரு குற்றப்பகர்வு சட்டத்துறைத் தலைமையதிபதியால் மேல்நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். சட்டத்துறைத் தலைமையதிபதி அதே சமயம் எந்நீதிமன்றத்தில் விளக்கம் நடைபெற்றுள்ளதோ அந்நீதிமன்றப் பிசுக்காலுக்கு, குற்றப்பத்திரத்தின் மீது விளங்கப்படவுள்ள குற்றஞ்சாட்டப்பட்ட ஆளுக்கு அல்லது ஆட்கள் ஒவ்வொருவருக்கும் சேர்ப்பிப்பதற்கென குற்றப்பகர்வின் பிரதியொன்றை அல்லது பிரதிகளை அனுப்பிவைத்தல் வேண்டும். பிசுக்காலானவர், சட்டத்துறைத் தலைமையதிபதியிடமிருந்து தம்மால் பெறப்பட்ட குற்றப்பகர்வின் பிரதியை அல்லது பிரதியொன்றினை குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆளுக்கு அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆட்கள் ஒவ்வொருவருக்கும் உடனடியாகவும் ஆகக் குறைந்தது விளக்கத்திற்கென விதித்துரைக்கப்பட்ட நாளுக்கு பதினான்கு நாட்களுக்கு முன்னராகச் சேர்ப்பித்தல் அல்லது சேர்ப்பிக்கச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேர்ப்பித்தல் மீளறிக்கையொன்றை மேல்நீதி

மன்றத்திற்கும் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கும் அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தவென நியமிக்கப் பட்ட எவரேனும் அலுவலரொருவருக்கும் செய்தல் வேண்டும்.

(ஆ) மேல்நீதிமன்றமானது, குற்றப்பகர்வைப் பெற்றுக் கொண்டதன்மீது குற்றஞ்சாட்டப்பட்ட ஆளுக் கெதிரான விளக்கம் நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதியை விதித்துரைக்கும் அறிவித்தலொன்றை அவரிடம் உடனடியாகச் சேர்ப்பிக்கச் செய்தல் வேண்டும்.

(இ) (i) இப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் ஏற்பாடு களுக்கமைவாக ஏதேனும் குற்றப் பகர்வை அல்லது விளக்கம் பற்றிய அறிவித்தலை குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவரிடம் சேர்ப்பித் தலானது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 45 ஆம், 46 ஆம் பிரிவுகளில் அழைப்பாணை சேர்ப்பித்தலுக் கெனக் குறித்துரைக்கப்பட்ட வகையில் பயனுறுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் 49 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அதற்கிணங்க அத்தகைய சேர்ப்பிப்பை எண்பிக்கும் நோக்கத்திற்காக ஏற்புடையதாதலும் வேண்டும் ;

(ii) இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் விதித் துரைக்கப்பட்டவகையில் சேர்ப்பிப்பு பயனுறுத் துப்படவியலாதவிடத்து, உரிய விழிப்புக் கவனத் தைப் பிரயோகிப்பதன் மூலம் குற்றஞ் சாட்டப் பட்ட ஆள் வழமையாக வதியும் வீட்டின் ஏதே னும் துலாம்பரமான பகுதியில் குற்றப்பகர்வு அல்லது அறிவித்தல் ஒட்டப்பட வேண்டுமென் பதுடன், அத்தகைய விடயத்தில் குற்றப்பகர்வு அல்லது அறிவித்தல் உரியவாறு சேர்ப்பிக்கப் பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதி விளக்கத் தேதிக்கு முன்னராக —

(i) குற்றஞ்சாட்டு விபரங்கள் பற்றிய சுருக்கமான கூற்றொன்றும், சான்றளிப்பதற்கு அழைக்கப்படும் சாத்தியமுள்ள சாட்சியாளர்களின் பட்டியலொன்றும், வழக்குத்தொடுநரால் பயன்படுத்தப்படக்கூடிய ஆவணங்கள் பற்றிய பட்டியலொன்றும் ; அத்துடன்

(ii) வழக்குத்தொடுநரால் துங்கிநிற்க உத்தேசிக்கப்படும் அத்தகைய நிகழ்வுகளின் சுருக்கக் குறிப்பொன்றும்,

குற்றஞ்சாட்டப்பட்ட ஆளுக்குக் கொடுத்துதவப்படச் செய்தல் வேண்டும்.

(உ) அவ்வாளின் விளக்கத்தின் போது மேல்நீதிமன்றம் அல்லது வழக்குத்தொடுநரானவர் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வித மிருப்பினும், குற்றப்பகர்வில் விதித்துரைக்கப்படாத ஏதேனும் அத்தகைய சாட்சியக்காரரை அழைக்கலாம் அல்லது ஏதேனும் அத்தகைய ஆவணத்தைப் பயன்படுத்தலாம் அல்லது சமர்ப்பிக்கலாம்.

**18.** (1) சான்றுக் கட்டளைச் சட்டத்தில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பினும் இச்சட்டத்தின் 3 ஆம், 4 ஆம், 5 ஆம், 6 ஆம் அல்லது 7 ஆம் பிரிவின்கீழான தவறுகளுக்கான வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் இப்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும். சான்று.

(2) ஏதேனும் கப்பலின் எவரேனும் அலுவலரால், ஊழியரால் அல்லது பயணியால் செய்யப்பட்டதும் இச்சட்டத்தின் கீழான ஒரு புலனாய்வின் அல்லது விசாரணையின்போது பதியப்பட்டதும் இச்சட்டத்தின் 3 ஆம் , 4 ஆம், 5 ஆம், 6 ஆம் அல்லது 7 ஆம் பிரிவின்கீழான எத்தவறு பற்றிய அவரது வாய்மொழிச் சான்று ஏல்தக்கதோ அத்தவறொன்றுக்கான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் ஆய்பொருள் நிகழ்வு அல்லது இயைபான கருமம் எதனையும் தொட்டுநிற்பதுவும் ஆன குற்ற ஒப்புதல் ஒன்றாக அமையாத ஏதேனும் கூற்று, அத்தகைய வழக்கு நடவடிக்கையில் ஏல்தக்கதாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 3 ஆம் அல்லது 4 ஆம் அல்லது 5 ஆம் அல்லது 6 ஆம் அல்லது 7 ஆம் பிரிவின் கீழான தவறொன்றுக்கான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் ஏதேனும் ஆய்பொருள் நிகழ்வை அல்லது இயைபான கருமத்தை தொட்டுநிற்கும் ஆவணமொன்றில் அல்லது வேறு பதிவேட்டில் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் கூற்று —

(அ) அத்தகைய வழக்கு நடவடிக்கையில் அத்தகைய ஆய்பொருள் நிகழ்வு அல்லது இயைபான கருமம் பற்றிய அத்தகைய ஆளின் நேரடி வாய்மொழிச் சான்று ஏல்தக்கதாயிருப்பின் ; அத்துடன்

(ஆ) கூற்றளித்த ஆள் இறந்திருப்பின் அல்லது அவரது உடல்நிலை அல்லது உளநிலை காரணமாக சாட்சியாளரொருவராகச் சமுகமளிப்பதற்குப் பொருத்தமற்றவராகவிருப்பின் ; அல்லது

(இ) கூற்றளித்த ஆள் இலங்கைக்கு வெளியே இருப்பின் அல்லது அத்தகைய ஆளைக் கண்டுபிடிப்பதற்கு என எடுக்கப்பட்ட நியாயமான நடபடியின் பின்னரும் கண்டுபிடிக்க முடியாதிருப்பின் அல்லது கூற்றை அளித்த ஆள் அத்தகைய வழக்கு நடவடிக்கையில் சான்றளிப்பதிலிருந்து தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றார் என நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பின் ; அத்துடன்

(ஈ) அது வழக்கு நடவடிக்கை எத்தவறு தொடர்பானதோ அத்தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவரினால் செய்யப்பட்ட குற்றவொப்புதலொன்றாக அமையக்கூடியதாகவல்லாதிருப்பின்,

அத்தகைய வழக்கு நடவடிக்கையில் ஏல்தக்கதாதல் வேண்டும்.

(4) ஏதேனும் தொழில், வியாபாரம் அல்லது உயர்தொழில் அல்லது வேறு ஒழுங்காக நடாத்தப்படும் தொழிற்பாட்டின் போது ஆக்கப்பட்ட, திரட்டப்பட்ட, கிடைக்கப்பெற்ற அல்லது பெறப்பட்ட ஒரு ஆவணத்தில் அல்லது வேறு பதிவேட்டில் உள்ளதும், இச்சட்டத்தின் 3 ஆம், 4 ஆம், 6 ஆம் அல்லது 7 ஆம் பிரிவின்கீழான தவறொன்றுக்கான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் ஏதேனும் ஆய்பொருள் நிகழ்வை அல்லது இயைபான கருமத்தைத் தொட்டுநிற்பதுவும் ஆன ஏதேனும் கூற்று —

(அ) அத்தகைய வழக்கு நடவடிக்கையில் ஆய்பொருள் நிகழ்வு அல்லது இயைபான கருமம் பற்றிய நேரடி வாய்மொழிச் சான்று ஏல்தக்கதாயிருப்பின்;

(ஆ) அது வழக்கு நடவடிக்கை எத்தவறு தொடர்பானதோ அத்தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவரினால் செய்யப்பட்ட குற்றவொப்புதலொன்றாக அமையாதிருப்பின்,

அத்தகைய வழக்கு நடவடிக்கையில் சான்றாக ஏல்தக்கதாதல் வேண்டும்.

நீதிமன்றமானது, ஆவணத்தில் அல்லது வேறு பதிவேட்டில் உள்ள கூற்றின் வாய்மையை, அத்துடன் ஆளொருவரால் ஆக்கப்பட்ட, திரட்டப்பட்ட, கிடைக்கப்பெற்ற அல்லது பெறப்பட்ட ஓர் ஆவணத்தின் அல்லது பதிவேட்டின் விடயத்தில் அந்த ஆவணம் அல்லது பதிவேடு எவ்வாளினால் ஆக்கப்பட்டதாக, திரட்டப்பட்டதாக, பெறப்பட்டதாக அல்லது எவ்வாளுக்குக் கிடைக்கப்பெற்றதாகக் கொள்ளப்படுகின்றதோ அவ்வாளினால் அது ஆக்கப்பட்டதாக திரட்டப்பட்டதாக, பெறப்பட்டதாக அல்லது அவ்வாளுக்குக் கிடைக்கப்பெற்றதாக, புறணானது எண்பிக்கப்பட்டாலொழிய, ஊகித்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின் 3 ஆம், 4 ஆம், 5 ஆம், 6 ஆம் அல்லது 7 ஆம் பிரிவின்கீழ் தவறொன்று புரிந்துள்ளதாகச் சந்தேகிக்கப்படும் எவரேனும் ஆளினால் செய்யப்படும் குற்ற ஒப்புதலாக அமையக்கூடிய ஏதேனும் கூற்று, அது பொலிசு அலுவலரொருவருக்குச் செய்யப்படாதும் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் இயைபற்றதாகவில்லாதும் இருப்பின், இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்கான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் அவருக்கெதிராக ஏல்தக்கதாதல் வேண்டும்.

## பாகம் V

## பொது

**19.** (1) இச்சட்டத்தினால் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவருக்கு அளிக்கப்பட்டுள்ள ஏதேனும் தத்துவம் அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் பிரயோகிக்கப்படுகையில் அவரை எதிர்க்கும் அல்லது அவருக்கு இடையூறு விளைவிக்கும் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஆகியோருக்கு இடையூறு விளைத்தல்.

அலுவலரால் தமக்கு வழங்கப்படும் ஏதேனும் சட்டமுறையான கட்டளையுடன் இணங்கியொழுகத் தவறும் எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினால் நடாத்தப்படும் சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப் படுவதன்மேல், மூன்றாண்டுகளுக்கு மேற்படாத காலமொன்றுக் கான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியை மீறும் ஒவ்வோர் ஆளும், இச்சட்டத்தின்கீழான தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவா னொருவரினால் நடாத்தப்படும் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

அதிகாரமளிக்கப் பட்ட அலுவலர் களைப் பாதுகாத்தல்.

**20.** அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் இச்சட்டத்தின்கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யாது தவிர்க்கப்பட்ட எவற்றுக்குமாக அவர் குடியியல் அல்லது குற்றவியலான வழக்குக்கு அல்லது குற்றவழக்குக்கு ஆளாதலாகாது.

ஒழுங்குவிதிகள்.

**21.** (1) அமைச்சரானவர், இச்சட்டத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும், அல்லது அவற்றுக்குப் பயனளிக்கும் நோக்கத்திற்காக ஒழுங்குவிதிகளை ஆக்க லாம்.

(2) குறிப்பாக, (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, அமைச்சரானவர், பின்வரும் விடயங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றில் எவற்றுக்காகவும் அல்லது அவை தொடர்பாகவும் ஒழுங்கு விதிகளை, ஆக்கலாம் —

(அ) இச்சட்டத்தின்கீழான தவறுகளைத் தடுக்கும், கண்டு பிடிக்கும், புலனாய்வு செய்யும் நோக்கத்துக்காக எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகள் ;

(ஆ) (i) ஏதேனும் வகுப்பினதான கப்பலுக்காக எவை யேனும் வலயங்களை மட்டுப்படுத்தப்பட்ட அல்லது தடைசெய்யப்பட்ட வலயங்களாகத் தீர்மானிப்பது ; அத்துடன்

(ii) அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் மட்டுப்படுத்தப்பட்ட வலயங்களுக்குள் நுழைவதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவது ;

(இ) இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் பணிகளை இணைந்தாற்றுதலும், கண்காணிப்பதும் ;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் தவறுகளைக் கண்டுபிடித்தற்கிட்டுச் செல்லும் தகவல்களைக் கொடுத்துதவும் ஆட்களுக்கும் கடற்கொள்ளையை ஒடுக்குவதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தும் ஆட்களுக்கும் வெகுமதிகளை வழங்கும் பொருட்டு வெகுமதித் திட்டமொன்றினை உருவாக்குவது ;

(உ) 15 ஆம் பிரிவின்கீழ், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரால், தத்துவங்கள் பிரயோகிக்கப்படுவதற்கான நடவடிக்கை முறைகளை அமைத்துருவாக்குதல்.

(3) அமைச்சரானவர், (2) ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியில் தரப்பட்டுள்ள கருமங்கள் தொடர்பில், கப்பற்றொழில் எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடனும் கடலது சட்டத்தின் மீதான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின்கீழ் இலங்கையின் கடப்பாட்டுடன் நடைமுறைச் சாத்தியமான அளவு இணங்கவுமன்றி, ஒழுங்குவிதி எதனையும் ஆக்குதலாகாது.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமெனப்துடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பின்னைய தேதியன்று செயற்பாட்டுக்கு வருதல் வேண்டும்.

(5) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர், வசதியான அளவு விரைவில் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் வழங்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதியானது அவ்வாறு அங்கீகாரம் வழங்கப்படாத தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் அதற்கு முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**22.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை எதுவும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

**23.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி —

"குற்ற ஒப்புதல்", "ஆய்பொருள் நிகழ்வு" என்பவை, சான்றுக் கட்டளைச் சட்டத்தால் முறையே அவைக்கு ஒதுக்கப்பட்ட பொருள்களைக் கொண்டிருக்கும் ;

"இறப்பளிதகு ஆயுதம்", "நேர்மையற்ற முறையில்", "பலாத்காரம்", "திருட்டு", "தன்னிச்சையாகக் காயம் விளைத்தல்", என்பன தண்டனைச் சட்டக்கோவையிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"மோட்டார் வாகனம்" என்பது, மோட்டார் போக்குவரத்துச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்;

"கப்பல்" என்பது, ஒவ்வொரு விவரணத்தினதுமான கப்பல் அல்லது கலம் அல்லது படகு அல்லது செலுத்தப் பயன்படுத்தப்படும் வேறேதேனும் விவரணத்தினதான கலமெனப் பொருளாகுமென்பதுடன் கப்பலை செலுத்தவும் கப்பலின் தொழிலை நடாத்தவும் அவசியமான, (வாழ்வுக்கான வழங்கல்கள் தவிர்ந்த) எல்லா உபகரணங்கள் ஆடைகள் மற்றும் சேர்பொருட்களையும் உள்ளடக்கும் ;

"இலங்கைத் துறைமுக அதிகாரசபை" என்பது, 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட இலங்கைத் துறைமுக அதிகாரசபை எனப் பொருளாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.